Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04 விலை ரூபா 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம்: 01 தை (26 - 01 - 1991) சனிக்கிழமை ஓசை: 342

Ho. Ko olds Mooo...

## கடந்த ஜூலைக்குப் பின் 109பேர் செயற்கை காலுக்கு பதிவு

யாழ். மாவட்டத்தில் சுண்டிக்குழியில் செயல்பட்டுவரும் யாழ். செயற்கைக் கால் தயாரிப்பு நிலையம் கடந்த வருடம் ஜூலை மாதத்திற்குப் பின் இன்றுவரை செயற்கைக் கால், செயற்கைக் கைகள் பொருத்தப்பட்ட விபரங்கள் பற்றி இந் நிலையப் பொறுப்பதிகாரி எமது நிருபருக்குத் தெரிவித்த விபரங்கள் பின்வருமாறு. கடந்த கால வன்செயல்களின் பின் மொத்தம் 109 பேர்கள் செயற்கைச் கால்

(4ஆம் பக்கம் பார்க்க)

திருக்கோவில் அதிரடிப்படை முகாமில்

# சித்திரவதையின் பின் 9 தமிழர் சுட்டுக் கொலை

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் அதிரடிப்படை முகாமைச் சேர்ந்த பொலிசார் தாம் கைது செய்த ஒன்பது தமிழர்களை பலத்த சித்திரவதைக்குப் பின்னர் சுட்டுக் கொன்றனர். இச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்றது.

கொலை செய்யப்பட்ட ஒன்பது பேரும் இரு வெவ்வேறு இடங்களில் கைது செய்யப்பட்டவர்களாகும். இக் கைதுகளும் கொலைகளும் பற்றித் தெரியவருவதாவது; கடந்த செவ்வாய்க்கிழமை இரவு ஒன்பது மணியளவில் திருக்கோவில் முகாமைச் சேர்ந்த விசேட அதிரடிப் படையினர் மூன்று ஏக்கர் கண்டம் என்னுமிடத்தில் தமது சேனை வயல்களுக்குக் காவலுக்கு நின்ற எட்டுத் தமிழர்களைக் கைது செய்து முகாமுக்குக் கொண்டு சென்றனர். முகாமில் வைத்து கடும் சித்திரவதையின் பின் அனைவரும் சுட்டுக்கொல்லப்பட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அடுத்த சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது அதே தினத்தன்று இரவு 9.30 மணி

(4ஆம் பக்கம் பார்க்க)

## மாதகல் கடற்பகுதியில் 7பேர் கடற்படையால் சுட்டுக் கொலை

(பண்டத்தரிப்பு)

கடற்படையினரால் கடலில் வைத்து கைதுசெய்யப்பட்ட 7பேர் அந்த இடத்திலேயே சுட்டுக்கொல்லப்பட்டனர்.

கடந்த 13ஆம் திகதி அகதிகளை இந்தியாவில் இறக்கி விட்டுத் திரும்பிவரும் வழியில் மாதகல் கடற்பகுதியில் வைத்து வள்ளங்களுடன் பவர் சிறிலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். இவர்களில் 7பேர் அந்த இடத்திலேயே சுட்டுக்கொல்லப்பட்டவர். மிகுதிப்பேர் கடற்படை

(4ஆம் பக்கம் பார்க்க)

## முத்தையன்கட்டில் குண்டுவீச்சு; பெண்காயம்; கட்டடங்கள் சேதம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள முத்தையன்கட்டு இரண்டாம் கண்டம் பகுதியில் சிறிலங்கா விமானப் படையால் மேற்கொள்ளப் பட்ட தாக்குதலில் பெண்மணி ஒருவர் படுகாயமடைந்தார். வீடு, கடை என்பன சேதமாக்கப்பட்டன.

நேற்றுமுன்தினம் சிறிலங்கா விமானப்படையைச் சேர்ந்த மூன்று குண்டுவீச்சு விமானங்

(4ஆம் பக்கம் பார்க்க)

## தீவிபத்தில் படுகாயம்

குப்பி விளக்கின் உதவியுடன் இரசாயனப் பதார்த்தங்களை கலந்து கொண்டிருந்த போது எதிர் பாராமல் தீப்பற்றியதால் தேவதாஸ் (23, மல்லாகம்) என்பவர் உடல் முழுதும் தீப்பற்றியதால் எரிகாயங்களுடன் மானிப்பாயில் இயங்கும் தெல்லிப்பளை அரசினர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஏ)

## புலிகளைக் களங்கப்படுத்த நாம் விரும்பவில்லை — கருணாநிதி

(சென்னை)

இலங்கையில் போராடும் விடுதலைப் புலிகளை தாம் எந்த வகையிலும் களங்கப் படுத்த விரும்பவில்லை என் ...

தெரிவிக்கும் தீர்மானத்தில் பேசிய தமிழக முதல்வர் கருணாநிதி மேலும் மத்திய

(4ஆம் பக்கம் பார்க்க)

## பண்டத்தரிப்பில் பதுக்கல்

பிந்திய செய்தி

## வளைகுடா நிலைமை

★ வளைகுடாவின் வடபதியில் ஈராக்கட்டுப்பாட்டில் இருந்த குராத்தீவில் குவைத்தின் தேசியக் கொடி ஏற்றப்பட்டுள்ளதாக பன்னாட்டுப் படைகளின் தளபதி அறிவித்துள்ளார். ஈராக்கின் கட்டுப்பாட்டில் இருந்த இந்தத் தீவு குவைத்தில் இருந்து 50 மைல் தூரத்தில் இருக்கிறது. இந்தத் தாக்குதலில் ஈடுபட்ட அனைத்து ஈராக்கிய கப்பல்களும் மூழ்கடிக்கப்பட்டதாகவும் மூன்று ஈராக்கிய ராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் 29 பேர் கைதிகளாக்கப்பட்டதாகவும் பன்னாட்டுப்படையினர் அறிவித்துள்ளனர்.

★ குவைத்திற்கு சொந்தமான குராத் தீவுகளில் குவைத்தின் தேசியக் கொடியை பல்தேசப் படைகள் ஏற்றிவிட்டிருப்பது அப்படைகளுக்குக் கிடைத்த வெற்றியில்லை, தாம் தந்திரோபாய ரீதியில் பின்வாங்கிக் கொண்டதன் விளைவே அது என ஈராக் கூறியுள்ளது.

★ நியூயோர்க் நகரில் அமெரிக்கர்களும் நச்சுவாயுக் கவசங்களை வாங்க ஆரம்பித்துள்ளார்கள். சதாம் ஹூசையின் ஆதரவாளர்கள் நியூயோர்க் நகரில் கொல்லாத தாக்குதலை மேற்கொள்ளக்கூடும் என்று இந்த நகர வாசிகள் அஞ்சுகிறார்களாம். இந்த தகவலை ராய்ட்டர் செய்தி ஸ்தாபனம் வெளியிட்டுள்ளது.

★ பாரசீக வளைகுடா யுத்தம் முடிவுறும் வரை மேலை நாடு சவூதி அரேபியாவுக்கான தனது ஆயுத விற்பனையை ரத்துச் செய்துள்ளது. சிலி, கொத்தணிக் குண்டுகளைத் (cluster Bombs) தயாரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

★ வளைகுடா நெருக்கடி குறித்து அவ்வப்போது ஐ. நா. பாதுகாப்புச்சபை கூட்டப்படவேண்டும் என்ற இந்தியாவின் கோரிக்கை ஏற்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலின் மீதான ஈராக்கின் தாக்குதலால் பன்னாட்டுப்படைகளுடன் இணைந்துள்ள அரபு நாடுகளின் முடிவுகளில் எந்த வித மாற்றமும் இருக்காது என எகிப்திய அதிபர் கொஸ்னி முபாரக் தெரிவித்துள்ளார்.

★ பஸரா மீது பறந்து சென்ற குண்டுவீச்சு விமானம் ஒன்றைச் சுட்டு வீழ்த்தி பிரிட்டிஷ் விமானி ஒருவரைக் கைது செய்திருப்பதாக ஈராக் கூறியுள்ளது.

விமானப்படை அதிகாரிகளுக்கு அமெரிக்க நாசகாரிக் கப்பல்கள் விமானம் தாங்கிக் கப்பல்கள் மீது தற்கொலைப்பாணியான தாக்குதல் நடத்த ஈராக் அங்கீகாரம் வழங்கியுள்ளதாக ஈராக்கிய பத்திரிகை யொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

★ ஈராக்கின் இராணுவம் உலகின் நான்காவது பெரிய தரைப்படை என்று பிரிட்டிஷ் படைகளின் பிரதம தளபதி கூறியுள்ளார்.

★ இதுவரை நடந்த போரில் 51 ஈராக்கிய இராணுவத்தினர் போர்க் கைதிகள் ஆகியுள்ளனர்.

★ சோவியத் இராணுவ அதிகாரிகள் சிலர் ஈராக்கில் இன்னமும் இருக்கக் கூடுமென அமெரிக்கா சந்தேகம் தெரிவித்துள்ளது.

★ இஸ்ரேலுக்கு எதிரான குரலை அடித்து அழிக்கவும், இஸ்ரேலைக் கட்டிக் காக்கவுமே அமெரிக்கா யுத்தத்தில் ஈடுபட்டிருப்பதாக ஈரானிய அதிபர் ரப்சன் ஜானி கூறியுள்ளார்.

★ ஜோர்தானுடன் தொடர்ந்து நட்புறவு பேணும் முயற்சியில் அதிபர் புஷ் விசேட தூதுவர் ஒருவரை அம்மானுக்கு அனுப்பியுள்ளார் என்றும் இம் முயற்சி பெரும் வெற்றி பெறவில்லை என அதிபர் மாளிகை வட்டாரங்கள் கூறியுள்ளன.

★ வளைகுடாவில் போர் பல மாதங்கள் நீடிக்கப்படும் என அமெரிக்கா அறிவித்துள்ளது. நேற்று ஐ ரோ ப்பி ...

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் அதிரடிப்படை முகாமைச் சேர்ந்த பொலிசார் தாம் கைது செய்த ஒன்பது தமிழர்களை பலத்த சித்திரவதைக்குப் பின்னர் சுட்டுக் கொன்றனர். இச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்றது.

கொலை செய்யப்பட்ட ஒன்பது பேரும் இரு வெவ்வேறு இடங்களில் கைது செய்யப்பட்டவர்களாகும். இக் கைதுகளும் கொலைகளும் பற்றித் தெரியவருவதாவது; கடந்த செவ்வாய்க்கிழமை இரவு ஒன்பது மணியளவில் திருக்கோவில் முகாமைச் சேர்ந்த விசேட அதிரடிப் படையினர் மூன்று ஏக்கர் கண்டம் என்னுமிடத்தில் தமது சேனை வயல்களுக்குக் காவலுக்கு நின்ற எட்டுத் தமிழர்களைக் கைது செய்து முகாமுக்குக் கொண்டு சென்றனர். முகாமில் வைத்து கடும் சித்திரவதையின் பின் அனைவரும் சுட்டுக்கொல்லப்பட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அடுத்த சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது அதே தினத்தன்று இரவு 9.30 மணி (4ஆம் பக்கம் பார்க்க)

## மாதகல் கடற்பகுதியில் 7பேர் கடற்படையால் சுட்டுக்கொலை

(பண்டத்தரிப்பு)

கடற்படையினரால் கடலில் வைத்து கைதுசெய்யப்பட்ட 7பேர் அந்த இடத்திலேயே சுட்டுக்கொலைப்பட்டனர்.

கடந்த 13ஆந் திகதி அகதிகளை இந்தியாவில் இறக்கி விட்டுத் திரும்பிவரும் வழியில் மாதகல் கடற்பகுதியில் வைத்து வள்ளங்களுடன் பவர் சிறிலங்காக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். இவர்களில் 7பேர் அந்த இடத்திலேயே சுட்டுக்கொலைப்பட்டவர். மிகுதி பேர் கடற்படை (4ஆம் பக்கம் பார்க்க)

## தீவிபத்தில் படுகாயம்

குப்பி விளக்கின் உதவியுடன் இரசாயனப் பதார்த்தங்களை கலந்து கொண்டிருந்த போது எதிர்பாராமல் தீப்பற்றியதால் தேவதாஸ் (23, மல்லாகம்) என்பவர் உடல் முழுவதும் தீப்பற்றியதால் எரிகாயங்களுடன் மானிப்பாயில் இயங்கும் தெல்லிப்பளை அரசினர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச)

## முத்தையன்கட்டில் குண்டுவீச்சு; பெண்காயம்; கட்டடங்கள் சேதம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள முத்தையன்கட்டு இரண்டாம் கண்டம் பகுதியில் சிறிலங்கா விமானப் படையால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் பெண்மணி ஒருவர் படுகாயமடைந்தார். வீடு, கடை என்பன சேதமாக்கப்பட்டன.

நேற்றுமுன்தினம் சிறிலங்கா விமானப்படையைச் சேர்ந்த மூன்று குண்டுவீச்சு விமானங் (4ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளைக் களங்கப்படுத்த நாம் விரும்பவில்லை — கருணாநிதி

(சென்னை)

இலங்கையில் போராடும் விடுதலைப் புலிகளை தாம் எந்த வகையிலும் களங்கப் படுத்த விரும்பவில்லை என்றும் அதேவேளை தேசப்பற்றில் தாம் யாருக்கும் சளைத்தவரல்ல என்றும் தமிழக முதல்வர் கூறியுள்ளார்.

நேற்று தமிழக சட்டசபையில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் பேசிய தமிழக முதல்வர் கருணாநிதி மேலும் மத்திய (4ஆம் பக்கம் பார்க்க)

## பண்டத்தரிப்பில் பதுக்கல் பொருள்கள் பிடிபட்டன

(பண்டத்தரிப்பு)

பொதுமக்களிடமிருந்து கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து பண்டத்தரிப்பில் லொறி உரிமையாளர் ஒருவரின் வீட்டை முற்றுகையிட்ட பண்டத்தரிப்பு பிரதேசப் பொறுப்பாளர் நசீர் தலைமையிலான குழுவினர் அங்கு பதுக்கி வைக்கப்பட்டிருந்த 17 மூடை மா, 14 மூடை சீனி, 93 சன்லைட், 144 லக்ஸ் (4ஆம் பக்கம் பார்க்க)

## ✲ பிந்திய செய்தி

## டெல்அவிவ் மீது மீண்டும் ஸ்கட்

ஈராக் நேற்று மாலை டெல்அவிவ் நோக்கி ஏழு ஸ்கட் ஏவுகணைகளைச் செலுத்தியதாக பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. இதனைத் தெரிவித்த இஸ்ரேலிய பாதுகாப்பு வட்டாரங்கள் சேத விபரங்கள் குறித்து தகவல் வெளியிடவில்லை. ஏவுகணைகளை இடைமறிக்கும் பற்றியட் ஏவுகணைகள் இஸ்ரேலினால் இரு தடவைகள் செலுத்தப்பட்ட போதும் ஸ்கட் ஏவுகணைகள் இஸ்ரேலில் வீழ்ந்து வெடித்துள்ளன.

## உணவுமுத்திரை அட்டை வந்தது உணவுப் பொருள் வரவில்லை

(வவுனியா)

வவுனியா கிராமப் புறப் பாடசாலை மாணவருக்கு அரசினால் வழங்கப்படும் உணவு முத்திரை அட்டை வழங்கப்பட்டுள்ள போதிலும் இதற்குரிய பொருள்கள் கூட்டுறவுச் சங்கத்திற்கு அனுப்பி வைக்கப்படவில்லை என்று புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4ஆம் பக்கம் பார்க்க)

## மீசாலை வாசி பல்கேரியாவில் நித்திரையில் வெட்டிக் கொலை

(நமதுநிருபர்)

ஜேர்மனிக்குச் செல்லச் சென்ற தமிழ் இளைஞரொருவர் பல்கேரியாவில் உள்ள சோபியா என்னும் இடத்தில் நித்திரையில் வைத்து கத்தியால் குத்தி கொடூரமாகக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

மீசாலையைச் சேர்ந்த பரமேஸ்வரன் (வயது 24) என்ற இளைஞரே இவ்வாறு பரிதாபகரமாக மரணமாகியுள் (4ஆம் பக்கம் பார்க்க)

## போர்நிறுத்தத்தை விலக்கியதாக புலிகள் லண்டனில் அறிவிப்பு

(லண்டன்)

கடந்த இருபத்தைந்து நாட்களுக்கும் மேலாக ஒருதலைப் பட்சமாக கடைப்பிடித்து வந்த போர் நிறுத்தத்தை விலக்கிக் கொண்டு விட்டதாக விடுதலைப் புலி (4ஆம் பக்கம் பார்க்க)

## மீன் நியமனத்திற்கு விண்ணப்பிக்க வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

சுய விருப்பத்தின் அடிப்படையில் ஓய்வூதியத்திற்கு விண்ணப்பித்த அரச ஊழியர்கள் தாம் தொடர்ந்தும் சேவையாற்ற வேண்டும் என்று மீண்டும் விரும்பினால் மீள் நியமனத்துக்காகவும் விண்ணப்பிக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

மேற்படி மீள் நியமனமானது சம்பந்தப்பட்ட அரச ஊழியரின் சேவை தொடர்ந் (4ஆம் பக்கம் பார்க்க)

## மேற்குத் தூதரகங்களுக்கு கொழும்பில் கடும் பாதுகாப்பு

(கொழும்பு)

பாரசீக வளைகுடா யுத்தம் சூடு பிடிக்கத் தொடங்கியுள்ள கொழும்பில் அமெரிக்க, பிரிட்டிஷ் தூதுவராலயங்க (4ஆம் பக்கம் பார்க்க)

மேற்கொள்ளக்கூடும் என்று இந்த நகர வாசிகள் அஞ்சுகிறார்களாம். இந்த தகவலை ராய்ட்டர் செய்தி ஸ்தாபனம் வெளியிட்டுள்ளது.

★ பாரசீக வளைகுடா யுத்தம் முடிவுறும் வரை சிலி நாடு சவூதி அரேபியாவுக்கான தனது ஆயுத விற்பனையை ரத்துச் செய்துள்ளது. சிலி, கொத்தணிக் குண்டுகளைத் (cluster Bombs) தயாரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

★ வளைகுடா நெருக்கடி குறித்து அவ்வப்போது ஐ. நா. பாதுகாப்புச்சபை கூட்டப்படவேண்டும் என்ற இந்தியாவின் கோரிக்கை ஏற்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலின் மீதான ஈராக்கின் தாக்குதலால் பன்னாட்டுப் படைகளுடன் இணைந்துள்ள அரபு நாடுகளின் முடிவுகளில் எந்த விதமாற்றமும் இருக்காது என எகிப்திய அதிபர் ஹொஸ்னி முபாரக் தெரிவித்துள்ளார்.

★ பஸரா மீது பறந்து சென்ற குண்டுவீச்சு விமானம் ஒன்றைச் சுட்டு வீழ்த்தி பிரிட்டிஷ் விமானி ஒருவரைக் கைது செய்திருப்பதாக ஈராக் கூறியுள்ளது.

விமானப்படை அதிகாரிகளுக்கு அமெரிக்க நாசகாரிக் கப்பல்கள் விமானந் தாங்கிக் கப்பல்கள் மீது தற்கொலைப்பாணியான தாக்குதல் நடத்த ஈராக் அங்கீகாரம் வழங்கியுள்ளதாக ஈராக்கிய பத்திரிகை யொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

★ ஈராக்கின் இராணுவம் உலகில் நான்காவது பெரிய தரைப்படை என்று பிரிட்டிஷ் படைகளின் பிரதம தளபதி கூறியுள்ளார்.

★ இதுவரை நடந்த போரில் 51 ஈராக்கிய இராணுவத்தினர் போர்க் கைதிகள் ஆகியுள்ளனர்.

★ சோவியத் இராணுவ அதிகாரிகள் சிலர் ஈராக்கில் இன்னமும் இருக்கக் கூடுமென அமெரிக்கா சந்தேகம் தெரிவித்துள்ளது.

★ இஸ்ரேலுக்கு எதிரான குரலை அடித்து அழிக்கவும், இஸ்ரேலைக் கட்டிக் காக்கவுமே அமெரிக்கா யுத்தத்தில் ஈடுபட்டிருப்பதாக ஈரானிய அதிபர் ரப்சன் ஜானி கூறியுள்ளார்.

★ ஜோர்தானுடன் தொடர்ந்து நட்புறவு பேணும் முயற்சியில் அதிபர் புஷ் விசேட தூதுவர் ஒருவரை அம்மானுக்கு அனுப்பியுள்ளார் என்றும் இம் முயற்சி பெரும் வெற்றி பெறவில்லை என அதிபர் மாளிகை வட்டாரங்கள் கூறியுள்ளன.

★ வளைகுடாவில் போர் பல மாதங்கள் நீடிக்கப்படும் என அமெரிக்கா அறிவித்துள்ளது. நேற்று ஜனாதிபதி மாளிகை அறிவித்துள்ள அறிக்கையொன்றில் சில நாட்களில் போர் முடிந்துவிடும் என அமெரிக்க மக்கள் எதிர்பார்க்கக் கூடாது என்றும், அதேநேரம் பன்னாட்டுப் படைகளுடனான போரில் ஈராக் பெற்ற சில வெற்றிகளை அமெரிக்க மக்கள் ஏற்றுக்கொள்ள தயாராக வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

★ இதுவரை நடந்த போரில் பன்னாட்டுப் படையினரின் 172 விமானங்களை தாம் சுட்டதாக ஈராக் அறிவித்துள்ளது. ஆனால் 24 விமானங்களை மாத்திரமே தாம் இழந்ததாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

★ வளைகுடாப் போர் தொடங்கியதன் பின்னர் முதன் முதலாக ஐ. நா. பாதுகாப்புச் சபை நேற்று நியூயோர்க்கில் கூடியது. ஐந்து ஆபிரிக்க நாடுகள் இந்தப் போர் குறித்து ஐ. நா. பாதுகாப்புச் சபை ஆலோசனை நடத்த வேண்டும் எனக் கேட்டுக்கொண்டதன்பேரில் இந்தக் கூட்டம் நடைபெற்றதாக கூறப்படுகிறது.

★ ஐரோப்பிய பாராளுமன்றம் வளைகுடாவில் உடனடி போர் நிறுத்தம் கோரி தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது. அத்துடன் இஸ்ரேலுக்கு எதிராக ஈராக் மேற்கொள்ளும் ஏவுகணைத் தாக்குதலைக் கண்டித்து தீர்மானம் ஒன்றை வைத்துள்ளது.

★ வளைகுடாவில் மீண்டும் அமைதியை நிலைநாட்டுவது பற்றி ஈரானிய தலைவர்களுடன் பேச்சு நடத்துவதற்காக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் வி. சி. சுக்ளா நேற்று தெஹிரான் சென்றார். அணிசேரா நாடுகளின் முயற்சியாக இந்தியா நடத்திவரும் ஆலோசனைகளின் ஒரு பகுதியாக இந்த நடவடிக்கை அமைகிறது.

★ பன்னாட்டுப் படையினரின் தாக்குதலுக்கு பலமுறை ஈராக் தாக்கப்பட்டபோதும் 600 யுத்த விமானங்களும், 200 ஹெலிக்கொப்டர்களும் வைத்திருக்கின்றது என அமெரிக்கா கூறியுள்ளது.

★ அமெரிக்காவும், அதன் நேச நாடுகளும் தற்போது ஈராக் மேல் மேற்கொண்டுவரும் வான் தாக்குதலுக்கு "சுடும் மழைச் சூறாவளி" என அமெரிக்க இராணுவ அதிகாரிகள் பெயர் சூட்டியுள்ளார்கள்.

பல்தேச படைகளின் கப்பற்படை மீது ஈராக் விமானத் தாக்குதலை ஆரம்பித்திருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

## வரி விளம்பரம்

**தரன் ஸ்ருடியோ**

றபர்சீல், கலர் - கறுப்பு வெள்ளை - பாஸ்போட் அடையாள அட்டை, என்லாஜ்மென்ட் படங்கள், விளம்பர போட், பிளாஸ்ரிக் போட் மற்றும் ஓவிய வேலைகளுக்கு 24, யாழ் வீதி, (ரெட்னா வீதி) யாழ்ப்பாணம்.

(B/1915)

**விற்பனைக்கு**

விவசாயிகள் தமக்குத் தேவையான சத்தரி, மிளகாய் சோவா, போன்ற மரக்கறி நாற்றுக்களையும் மரக்கறி விதைகளையும் எம்மால் புதிதாக அமைக்கப் பெற்ற ஸ்ரீராம் விவசாயப் பண்ணையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி, திரு தே. வரதராசா, சிவ ஐங்கரன் விவசாய விற்பனை நிலையம், அராலி மேற்கு, வட்டுக்கோட்டை.

(B/1923)


## இலவச கீரைவிதை விநியோகம்

(யாழ்ப்பாணம்)

மில்க்வைற் தாபனத்தில் கீரை விதை இலவசமாக விநியோகிக்கப்படுகிறது. பெற விரும்புவோர் சுய விலாசமிட்டு ஒரு ரூபா அஞ்சல் முத்திரை ஒட்டிய உறை அனுப்பி மேற்படி தாபனத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

## 350 கிராம் பாண் 8ரூபா 50சதம்

(சாவகச்சேரி)

இன்றுவரை 14ரூபாவாக விற்கப்பட்டுவந்த பாணின் விலை இனிமேல் சில்லறை விலை ரூபா 8.50 க்கு விற்கப்படுமென பேக்கரி உரிமையாளர்களும் வர்த்தக சங்கமும் நடாத்திய பேச்சுவார்த்தையில் இணக்கம் காணப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. 350 கிராம் எடையுள்ள பாண் மொத்தமாக 8 ரூபாவுக்கும் சில்லறைவிலை ரூ 8.50 என்றும்நேற்றுமுன் தினம் பேக்கரி உரிமையாளர்களால் நிர்ணயிக்கப்பட்டதாகத் தெரிகின்றது.

## வேல்முருகன் ஆலயத்தில் பிரதிஷ்டை

(யாழ்ப்பாணம்)

நல்லை சந்தனுக்கு கொடிச்சீலை வழங்கும் வேல்முருகன் ஆலயத்தில் இன்றுசனிக்கிழமை அழகிய சந்தான கோபாலர் கருங்கற் சிலை பிரதிஷ்டை பண்ணப்படவுள்ளது என அந்த கோவிலின் தர்மகர்த்தா தெரிவித்துள்ளார். (லோ)

## பிற்போடப்பட்டது

யாழ். மாவட்டகிக்கனசடன் வழங்கு கூட்டுறவுச்சங்கங்களின் ஸ்தாபகரும் முன்னாள் தலைவருமான அமரர் திரு. ச. ஞானப்பிரகாசம் அவர்களின் 27-1-91 இல்நடைபெறவிருந்த நினைவுஅஞ்சலிக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது எனத்தெரியவருகின்றது.

# சட்டவிரோத நடவடிக்கையில் பாதுகாப்பு படையினர்

நாட்டில் இடம்பெறும் சட்டவிரோத சம்பவங்களில் பாதுகாப்புபடையினரும் சம்பந்தப்படுவது குறித்து அரசாங்கம் கவலை வெளியிட்டுள்ளது. ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட மனித உரிமைகள் செயலணியும், பாதுகாப்பு அமைச்சும் இணைந்து நடாத்திய கண்காணிப்பிலிருந்து இத்தகைய சம்பவங்கள் அதிகரித்து வருவது கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. அமைச்சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்காவும், ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோனும் கோட்டே பாராளுமன்றத் தொகுதியில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டொன்றில் மேற்படி தகவலைத் தெரிவித்துள்ளனர்.


## பொது மக்களின் நலன்கருதி

மீண்டும் செயலாற்ற முன்வந்துள்ளது

**வில்லியம் ஹாவே ஞாபகார்த்த மருத்துவமனை**

வைத்திய நிபுணர்களின் ஆலோசனை பெறவும், ஆய்வு கூட மருத்துவப்பரிசோதனைகளுக்கும் தரமான சிகிச்சைகளுக்காகவும் இரவு பகல் சேவையை 1991 ஜனவரி 26ஆம் திகதி முதல் வில்லியம் ஹாவே ஞாபகார்த்த மருத்துவமனை மீண்டும் செயலாற்ற முன்வந்துள்ளது.

17, கண்டி றோட், கிளிநொச்சி

இப்படிக்கு நிர்வாகம்.

(B/1989)

## விக்னா டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

**வினா - விடை** வகுப்புக்கள்

**O/L**

**DAY CLASSES** (8.30 - 1.30)

ஆரம்பம்:- 28 - 1 - 91

**EVENING CLASSES** (3.00 - 5.45)

ஆரம்பம்:- 27 - 1 - 91

91 DEC. O/L; ஆண்டு 6,7,8,9,10

புதிய பிரிவுகள் ஆரம்பம்:- 06 - 2 - 91

(B-1910)

## AL 91, AL 92

CHEMISTRY 91 – சேதன (Organic)
92 – அடிப்படை (Basic)

திரு. மகாதேவா B.Sc.

PHYSICS 91 – மின்னியல் (Electricity)
91 – வெப்பவியல் (Heat)
92 – ஒளியியல் (Light)

திரு. கணேசன் B.Eng.

ஆரம்பம்: 26 - 1 - 91

**BOND INSTITUTES**

58 A, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம். (B/1933)

## வெளிவாரிப்பட்டப்படிப்புகள்

கல்வியாண்டு 1991 - 92

இலங்கைப் பல்கலைக் கழகங்களின் பட்டப் படிப்புநெறிகளான

- கலைமாணி B. A
- விஞ்ஞானமாணி புள்ளிவிபரவியல் B. Sc
- வணிகமாணி B. Com

க. பொ. த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்

விபரத்தினையும் விண்ணப்பப் படிவத்தினையும் ரூபா 10 செலுத்தி நேரில் பெற்றுக் கொள்ளலாம்

விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன

உதவிப்பதிவாளர்
பட்டப்படிப்புகள் கல்லூரி
148/1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (B/1931)

## A/L 90, O/L 90 (தடைப்பட்ட பரீட்சை)

மீட்டல், வினா-விடை வகுப்புகள்

அனேக மாணவர்களின் கோரியதற்கிணங்க,

**A/L விஞ்ஞான பாடங்கள்** Day Class

**O/L சகல பாடங்களும்** - மாலை வகுப்புகளாகவும்

நடாத்தப்படும்.

- மாதாந்தப் பரீட்சைகள் நடாத்தப்படும்.
- இறுதி - பயிற்சிப் பரீட்சையில் எமது நிறுவனத்தில் கற்கின்ற, கற்காத அனைத்து மாணவர்களும் பங்குபற்றலாம்.

23-01 1991 இல் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.

**BOND INSTITUTES**

58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
(B-1932)


## நினைவு கூருகின்றோம்!

**ஜனவரி 26**

1986ஆம் ஆண்டு ஒட்டிசுட்டானில் பொலிஸ் கொமாண்டோக்களுடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரமரணமடைந்த

**லெப். சசி** (க. கந்தசாமி - கொக்குத்தொடுவாய்)

1990ஆம் ஆண்டு மாவிட்டபுரம்

## கிரைவிதை விநியோகம்

(யாழ்ப்பாணம்)

மில்க்வைற் தாபனத்தில் கிரை விதை இலவசமாக விநியோகிக்கப்படுகிறது. பெற விரும்புவோர் சுய விலாசமிட்டு ஒரு ரூபா அஞ்சல் முத்திரை ஒட்டிய கவரை அனுப்பி மேற்படி தாபனத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

## பிற்போடப்பட்டது

யாழ். மாவட்ட இக்கனைசமன் வழங்கு கூட்டுறவுச்சங்கங்களின் சமாச தாபகரும் முன்னாள் தலைவருமான அமரர் திரு. ச. ஞானப்பிரகாசம் அவர்களின் 27-1-91 இல் நடைபெறவிருந்த நினைவுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது எனத் தெரியவருகின்றது.

(3.00 - 5.45)

ஆரம்பம்:- 27 - 1 - 91

91 DEC. O/L; ஆண்டு 6,7,8,9,10

புதிய பிரிவுகள் ஆரம்பம்:- 06 – 2 – 91

(B-1910)

O/L சகல பாடங்களும் - மாலை வகுப்புகளாகவும் நடாத்தப்படும்.

- மாதாந்தப் பரீட்சைகள் நடாத்தப்படும்.
- இறுதி - பயிற்சிப் பரீட்சையில் எமது நிறுவனத்தில் கற்கின்ற, கற்காத அனைத்து மாணவர்களும் பங்குபற்றலாம்.

23-01 1991 இல் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.

## BOND INSTITUTES

58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

(B-1932)

பொது மக்களின் நலன்கருதி

மீண்டும் செயலாற்ற முன்வந்துள்ளது

## வில்லியம் ஹாவே ஞாபகார்த்த மருத்துவமனை

வைத்திய நிபுணர்களின் ஆலோசனை பெறவும், ஆய்வு கூட மருத்துவப்பரிசோதனைகளுக்கும் தரமான சிகிச்சைகளுக்காகவும் இரவு பகல் சேவையை 1991 ஜனவரி 26ஆம் திகதி முதல் வில்லியம் ஹாவே ஞாபகார்த்த மருத்துவமனை மீண்டும் செயலாற்ற முன் வந்துள்ளது.

17, கண்டி றோட்,
சண்டிலிப்பாய்

இப்படிக்கு
நிர்வாகம்.

(B/1929)

## AL 91, AL 92

CHEMISTRY 91 – சேதன (Organic)
92 – அடிப்படை (Basic)

திரு. மகாதேவா B.Sc.

PHYSICS 91 – மின்னியல் (Electricity)
91 – வெப்பவியல் (Heat)
92 – ஒளியியல் (Light)

திரு. கணேசன் B.Eng.

ஆரம்பம்: 26 - 1 - 91

**BOND INSTITUTES**

58 A, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்.

(B/1935)

## நினைவு கூருகின்றோம்!

### ஜனவரி 26

1986ஆம் ஆண்டு ஒட்டிசுட்டானில் பொலிஸ் கொமாண்டோக்களுடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரமரணமடைந்த

**லெப். சசி** (க. கந்தசாமி - கொக்குத்தொடுவாய்)

1990ஆம் ஆண்டு மாவிட்டபுரம் மோதலில் காயமுற்று வீரமரணமடைந்த

**சௌத்ரி** (க. சண்முகலிங்கம் - மயிலிட்டி.)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

இராணுவம்
வயது பார்த்தும்
நிலை பார்த்தும் குறி வைப்பதில்லை.
''துப்பாக்கியும் அவனும்
சரிசம உயரம்'' என்றவர் நெஞ்சு
தீப்பற்றி எரிக
எதிரியின் இலக்குகள்
வீட்டை எரிக்கவும்
இனத்தை அழிக்கவும்
இன்னும் நிழல்களில் நிலை ஏன் கொண்டீர்!
இளைய புதல்வருடன்
உம்மைப் பகிர்ந்து கொள்ள
தாயகத்தில்
சுதந்திரம் உலவட்டும்.

- விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B-1896)

## இசை, நடன வகுப்புகள்

- ★ சங்கீதம் ★ வயலின்
- ★ நடனம் ★ வீணை
- ★ மிருதங்கம் ★ புல்லாங்குழல்

- வட இலங்கை சங்கீத சபையினரால் வருடந்தோறும் நடாத்தப்படும் சங்கீத நாடகப் பத்திர பரீட்சைக்கு தோற்றுவதற்கு ஏற்ற வகையில் தரம் 1 முதல் ஆசிரியர் தரம் வரை பயிற்றுவிக்கப்படும்.
- சனி, ஞாயிறு மற்றும் வெள்ளி தவிர்ந்த கிழமை நாட்களில் மாலை நேர வகுப்புகள் நடைபெறும்.
- G.C.E O/L, A/L சங்கீத, நடன வகுப்புகளும் நடைபெறும்.

வகுப்புகள் தைப்பூசத்தினத்தன்று (30-01-91) பி.ப 3.00 மணிக்கு ஆரம்பமாகின்றன.

விபரங்கட்கு:

## கலாலயா

பதிவு இல. 16020
கப்டன் நரேன் வீதி,
(ஆஸ்பத்திரியின் பின்புறம்)
யாழ்நகர்.

(B- 1922)

### போட்டோஸ்ரற்

நல்லூரில் தரமான, தெளிவான போட்டோஸ்ரற் பிரதிகளுக்கும், கறுப்பு, வெள்ளை புகைப்படங்களுக்கும் நாடுங்கள்;

**சித்ராலயா**

351, கோவில் வீதி,
நல்லூர்.
(கோயில் பின் வீதியில்,
கம்பன் கோட்டமுன்பாக)

(B-1928)

நாளை ஆரம்பம்

**A/L 90 & 91**
**Pure / Applied**

திரு. கலைநேசன் B.Sc(Cey)

விபரங்கட்கு:
PERSONAL CLASSES
B. M. C. முன்லேன்,
Jaffna.

(A/L92 ஆரம்பமாகிவிட்டது)

(B/1903)

# நிவாரணத் தொகை அதிகரிக்க
# யாழ். அரச அதிபர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தொழில்பாதிப்புற்ற இடம்பெயர்ந்த மக்களுக்கு உலர் உணவுப்பொருள் விநியோகத்திற்கு என்று ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கும் பணத்தின் தொகையை அதிகரிக்கும்படி தான் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரைக் கேட்டிருப்பதாக யாழ் அரச அதிபர் தெரிவித்தார்.

தற்போது 5 அங்கத்தவர்களுக்கு மேற்பட்ட குடும்பம் ஒன்றிற்கு 3.5 ரூபா மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொகையை அதிகரிப்பது தொடர்பாக விரைவில் ஒரு முடிவு எடுக்கப்பட இருக்கிறது.

அத்தியாவசியப்பொருள்கள் சிலவற்றைக் கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டு கட்டுப்பாட்டு விலையில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பாவனையாளருக்கு விநியோகிப்பதற்கும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளருடன் பேசி ஒரு முடிவுக்கு வர இருப்பதாகவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார். (ஈ)

★ சிந்தனைக்கு ★

அனுபவம் என்பது அதிக பணம் செலவாகும் பள்ளி; ஆயினும் அறிவிலிகள் வேறு பள்ளியில் பயிலமாட்டார்கள்.

ஈழநாதம்

31, மகேந்திராவீதி யாழ்ப்பாணம். 26-01-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025 - 2839 நிர்வாகபீடம்: 2208
த பெ எண் 05

## அனுபவம் - தவறுகள் படிப்பினைகள் புகட்டும்

இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் வி சி சுக்லா இன்னும் இரு தினங்களில் கொழும்பு வரவுள்ளார். அவரது விஜயத்தின்போது பல்வேறு விடயங்கள் பேசப்பட்டாலும் தமிழர் தேசிய இனப்பிரச்சினையும் திட்டவட்டமாக பேசப்படும் என்பதில் சந்தேகமில்லை.

இலங்கையுடனான சிறிலங்கா அரசுடனும், தமிழ் மக்களுடனுமான - பெரும் இராஜ தந்திரத் தோல்வியின் பின்னர் இந்தியா இலங்கை தொடர்பாக எடுத்து வைக்கும் முதல் அடி இதுவென்றே சொல்லலாம். ஆகையினால் கொழும்பு வரும் இந்திய வெளிவிவகார அமைச்சர் இன்றைய நிலையை தெளிவாகப் புரிந்துகொண்டு வருவாரேயானால், இலங்கையில் மீண்டும் ஒரு இராஜ தந்திர தோல்வியைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

இன்று இலங்கைத் தீவில் 1987 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்த நிலையில் சிறிலங்கா தரப்போ, தமிழர் தரப்போ இல்லை என்பதை இந்தியா முதலில் புரிந்து கொள்ள வேண்டும். சிறிலங்கா தரப்பினர் அன்றுபோல் இன்று இந்தியாவைக் கண்டு அச்சம் கொண்டவர்களாக இல்லை. சர்வதேச அரங்கில் இந்திய விரோத போக்குடைய நாடுகளுடன் நெருங்கிய தொடர்பை வளர்த்துக் கொண்டுள்ளார்கள். ஆகையால் இந்திய ஆதரவுப்போக்கு பேச்சில் மட்டுமே இருக்கும். இதனை சிறிலங்கா அமைச்சர்களின் பேச்சுகளே வெளிக்காட்டுகின்றன.

மூன்று தினங்களுக்கு முன்னர் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுக்லாவின் வருகை பற்றி பாராளுமன்றத்தில் பிரஸ்தாபித்த சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் ஹமீது இந்திய - இலங்கை உடன்படிக்கையில் இதுவரை நிறைவேற்றப்படாதிருக்கும் அம்சங்கள் குறித்து இந்திய அமைச்சருடன் உரையாட இருப்பதாகத் தெரிவித்தார். அதேவேளை பாதுகாப்பு இணை அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன இந்திய இலங்கை ஒப்பந்தம் காலங்கடந்தது எனக் கூறினார்.

அமைச்சர் ரஞ்சன் சொன்னதுதான் உண்மை. சிறிலங்கா தரப்பினருக்கு இந்திய - இலங்கை ஒப்பந்தம் காலங்கடந்த ஒன்றுதான். இலங்கை இந்திய ஒப்பந்தத்தை நிறைவேற்ற இந்தியா பகீரதப் பிரயத்தனம் செய்தது. தனது பணத்தையும் வீரர்களையும் இதற்காக செலவிட்டது. ஆனால் அன்றைய சிறிலங்கா தலைவர்கள் சரி, இன்றைய தலைவர்கள் சரி அதனை கடைப்பிடிக்கவில்லை.

மேலும், இந்திய - இலங்கை ஒப்பந்தம் காலம் கடந்த ஒன்று என்ற அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னாவின் கூற்று தனியே இலங்கைத் தமிழர் விடயத்தில் மட்டும் என இந்தியா கணக்குப் போடுமாயின் அதுவும் இந்தியாவின் தவறாகவே போய் முடியும்.

இந்திய-இலங்கை ஒப்பந்தம் பேச்சளவில் இலங்கைத் தமிழர் தொடர்பாக செய்யப்பட்டதாகக் கூறிக்கொள்ளப் பட்டபோதும் அந்த ஒப்பந்தம் பிரதானமாக இந்திய நலனைக் கொண்டதாகும். இந்த நிலையில், அமைச்சர் ரஞ்சனின் ஒப்பந்தம் காலவதியாகி விட்டது என்ற கூற்று தமிழர் தொடர்பான ஒப்பந்த சரத்துக்கள் மட்டுமல்ல இந்திய நலன்தொடர்பானசரத்துக்களும்தான என்பதையும் கொழும்பு வரும் அமைச்சர் சுக்லா உணர்ந்து கொள்ள வேண்டும்.

அதேவேளை இலங்கைத் தமிழரும் இந்தியாவின்பால்

## அனுமதி இருந்தும் நடவடிக்கை தாமதமாகும்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்துக்கு விவசாய ஊடுபொருள்கள் மற்றும் விதை பொருள்களை எடுத்து வருவதற்கு யு எஸ் எயிட் ஸ்தாபனத்திற்கு கூட்டுப் படைகளின் தலைமை அலுவலகம் அனுமதி வழங்கப் பட்டபோதிலும் இந்நிறுவனத்தின் திட்டங்களை நடைமுறைக்கு கொண்டுவருவதற்கு காலதாமதங்கள் எடுக்கும் என்று இந்நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்நிறுவனம் மேற்படி பொருள்களை வடபகுதிக்கு எடுத்துவருவதற்கும் விவசாய விஸ்தரிப்பு வேலைகளை மேற்கொள்ளுவதற்கும் கடந்த பல மாதங்களாக கூட்டுப் படைகளின் தலைமை அலுவலகம் அனுமதி மறுத்து வந்துள்ளது.

இந்நிறுவனம் விவசாய உரம், விதைகள், நவீன விவசாய உபகரணங்கள் போன்றவற்றை வடபகுதிக்கு எடுத்து வந்து விவசாய நடவடிக்கைகளை விஸ்தரிப்பதற்கு பல மாதங்களாக முயற்சி செய்து வந்தது குறிப்பிடத்தக்கது. (ஈ)

## களஞ்சியத்தை பதிவு செய்ய வர்த்தகர் சங்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வர்த்தகர்கள் பொருள்களை களஞ்சியப்படுத்தும் இடங்களின் முகவரிகளை வர்த்தகர் சங்கத்தில் உடன் பதிவு செய்யும்படி கோரப் படுகின்றார்கள். மொத்த வியாபாரிகளும், சில்லறை வியாபாரிகளும் தத்தமது களஞ்சியத்தில் மட்டுமே பொருள்களை களஞ்சியப் படுத்தல் வேண்டும். பதிவு செய்யப்படாத இடங்களில களஞ்சிய படுத்தல் கண்டு பிடிக்கப்பட்டால் கட்டட உரிமையாளர்கள் கடும் தண்டனைக்குள்ளாக்கப்படுவதுடன் பொருள்களும் பறிமுதல் செய்யப்படும் என வர்த்தக சங்கமும் விலைக்கட்டுப்பாட்டுத் திணைக்களமும் கூட்டாக விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளன.

## கவனிப்பாரற்ற நிலையில் கைதடி வயோதிபர் இல்லம்

(செ.த.மை)

கைதடியில் அமைந்துள்ள அரசாங்க வயோதிபர் இல்லம் பல மாதங்களாக எந்த வித வசதியுமின்றி கவனிப்பாரற்ற நிலையில் உள்ளது.

இந்த இல்லத்தில் 129 ஆண்களும் 71 பெண்களும் தங்கியிருக்கிறார்கள். இவர்களுள் 58 வயோதிபர்கள் போதிய வசதியின்றி வெறும் கட்டில்களிலும் பலகைகளிலும் இருந்து

தற்போது அருகாமையிலிருக்கும் கைதடி அரசினர் ஆயுள்வேத வைத்தியசாலையில் கடமையாற்றும் டாக்டர்களே இரண்டு மணி நேரம் வந்து வயோதிபர்களை பார்வையிடுகின்றனர். ஆனால் அந்த டாக்டர்களுக்கு மேலதிக சேவைக்கான சம்பளம் கடந்த பல மாதங்களாக சமூக சேவைப் பகுதியினால் வழங்கப்படவில்லை.

## உத்தியோகத்தர் தெரிவு

ஈச்சமோட்டை சன சமூக நிலைய வருடாந்த பொதுக் கூட்டம், சமீபத்தில் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. பெருமளவிலானோர் கலந்துகொண்ட இக்கூட்டத்தில் பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாக ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு ஏ கனகசபாபதி, உபதலைவர் இ திருச்சாபதி பீற்றர், செயலாளர் - சச்சிதானந்தச்செல்வன், உபசெயலாளர் செல்வன் அனுறச், பொருளாளர் சல்வன் கே மு வீதரன், விளையாட்டுத்துறை பொறுப்பாளர் கபரின் டி ஏ எம். தணசிங்கம் 9 பேர் கொண்ட ஆட்சிக்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் திருவாளர்கள் வே யீ செபஸ்தியாம்பிள்ளை (ஜே பி) ஏ சபாபதிப்பிள்ளை (யாழ் உதவி அரசாங்க அதிபர்), தொழிலதிபர் சி கனகராசா, பழமெயிச்செல்வர் கே சச்சிதானந்தசிவம், தொழில அதிபர் எஸ். ஞானப்பிரகாசம் ஆகியோர் எதிர்வரும் இருவருடங்களுக்கு போஷகர்களாக தெரிவுசெய்யப்பட்டனர்.

## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட சாரணர் இணைச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமை 26 ஆம் திகதி யாழ். வைத்தீஸ்வரா வித்தியாசாலையில் நடைபெறும்.

யாழ் அரசாங்க அதிபர் அன்ரன் அல்பிரட் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டம் 6 ஆண்டுகளின் பின்னர் நடைபெறுகின்றது என அறிவிக்கப்பட்டுள்ளது. சகல பாடசாலை அதிபர்கள், உப அதிபர்கள், சாரணர் தலைவர்கள் மற்றும் இளைச்சங்க உறுப்பினர்களும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

முன்பிருந்த நிலையில் சிறிலங்கா தரப்போ, தமிழர் தரப்போ இல்லை என்பதை இந்தியா முதலில் புரிந்து கொள்ள வேண்டும். சிறிலங்கா தரப்பினர் அன்றுபோல் இன்று இந்தியாவைக் கண்டு அச்சம் கொண்டவர்களாக இல்லை. சர்வதேச அரங்கில் இந்திய விரோத போக்குடைய நாடுகளுடன் நெருங்கிய தொடர்பை வளர்த்துக் கொண்டுள்ளார்கள். ஆகையால் இந்திய ஆதரவுப்போக்கு பேச்சில் மட்டுமே இருக்கும். இதனை சிறிலங்கா அமைச்சர்களின் பேச்சுக்களே வெளிக்காட்டுகின்றன.

மூன்று தினங்களுக்கு முன்னர் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுக்ளாவின் வருகை பற்றி பாராளுமன்றத்தில் பிரஸ்தாபித்த சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் ஹமீத் இந்திய - இலங்கை உடன்படிக்கையில் இதுவரை நிறைவேற்றாதிருக்கும் அம்சங்கள் குறித்து இந்திய அமைச்சருடன் உரையாட இருப்பதாகத் தெரிவித்தார். அதேவேளை பாதுகாப்பு இணை அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ண இந்திய இலங்கை ஒப்பந்தம் காலங்கடந்தது எனக் கூறினார்.

அமைச்சர் ரஞ்சன் சொன்னதுதான் உண்மை. சிறிலங்கா தரப்பினருக்கு இந்திய - இலங்கை ஒப்பந்தம் காலங்கடந்த ஒன்றுதான். இலங்கை இந்திய ஒப்பந்தத்தை நிறைவேற்ற இந்தியா பகீரதப் பிரயத்தனம் செய்தது. தனது பணத்தையும் வீரர்களையும் இதற்காக செலவிட்டது. ஆனால் அன்றைய சிறிலங்கா தலைவர்கள் சரி, இன்றைய தலைவர்கள்சரி அதனை கடைப்பிடிக்கவில்லை.

மேலும், இந்திய - இலங்கை ஒப்பந்தம் காலம் கடந்த ஒன்று என்ற அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ணாவின் கூற்று தனியே இலங்கைத் தமிழர் விடயத்தில் மட்டும் என இந்தியா கணக்குப் போடுமாயின் அதுவும் இந்தியாவின் தவறாகவே போய் முடியும்.

இந்திய-இலங்கை ஒப்பந்தம் பேச்சளவில் இலங்கைத் தமிழர் தொடர்பாக செய்யப்பட்டதாகக் கூறிக்கொள்ளப் பட்டபோதும் அந்த ஒப்பந்தம் பிரதானமாக இந்திய நலனைக் கொண்டதாகும். இந்த நிலையில், அமைச்சர் ரஞ்சனின் ஒப்பந்தம் காலவதியாகி விட்டது என்ற கூற்று தமிழர் தொடர்பான ஒப்பந்த சரத்துக்கள் மட்டுமல்ல இந்திய நலன்தொடர்பானசரத்துக்களும்தானா என்பதையும் கொழும்பு வரும் அமைச்சர் சுக்ளா உணர்ந்து கொள்ள வேண்டும்.

அதேவேளை இலங்கைத் தமிழரும் இந்தியாவின்பால் முன்னர் கொண்டுள்ள நம்பிக்கை இப்பொழுது கொண்டவர்களாக இல்லை இந்தியா தமக்கு செய்த துரோகத்தனத்தை அவர்கள் மறந்து விடுவதாக இல்லை. அதாவது கடந்தகாலச் சம்பவங்கள் இந்தியா மீதிருந்த நம்பிக்கையை சீரழித்துவிட்டது இருப்பினும் இந்தியா தமக்கு உதவ வேண்டும் என இலங்கைத் தமிழர் எதிர்பார்த்துக்கொண்டே இருக்கின்றார்கள் ஆனால் இதற்காக இலங்கைத் தமிழர் தமது உரிமைகளை ஒருபோதும் இழக்கத் தயாராக இல்லை.

ஆகையினால், கொழும்பு வரவிருக்கும் அமைச்சர் இலங்கைத் தமிழரின் அபிலாசைகளை கருத்தில் கொள்ளுதலும் வேண்டும். இது இந்தியாவின் தார்மீகக் கடமையுங்கூட. ஏனெனில் தமிழர் மீதான இன அடக்குமுறையை சிறிலங்கா அரசாங்கங்கள் கட்டவிழ்த்து விட்டமைக்கு வரலாற்று ரீதியாக இலங்கைத் தமிழருக்கும் இந்தியாவிற்கும் இருந்த நல்லுறவும், இந்தியா மீதிருந்த அச்சமுமே முக்கிய காரணமாகும். அத்தோடு 1987 இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மூலமும் இந்தியா தமிழரைப் பலவீனப்படுத்தியும் விட்டது

இந்த நிலையில் கொழும்பு வரவுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் சுக்ளா திட்டவட்டமானதொரு கொள்கையுடன் கொழும்பு வருதல் நல்லது.

இந்தக் கொள்கையானது அவர்களின் கடந்தகால அனுபவத்துடன் கூடிய நடைமுறைக்குச் சாத்தியமான தாகவும் இருத்தல்வேண்டும் இதற்கு வேறு ஒருகாரணமும் உண்டு. கடந்த காலத்தில் கொழும்பு வந்த இந்திய அமைச்சர்கள் எவரையும்விட மிகவும் பலவீனமான நிலையிலேயே சுக்ளா வருகின்றார். அதாவது பொம்மையான சந்திரசேகரின் அமைச்சரவையில் இருந்து எம். பி. பதவியும் இழந்தவராக அமைச்சர் சுக்ளா வருவதனால் ஆகும்.

அவ்வாறில்லாவிடில், நரசிம்மராவில் இருந்து கே. சி. பந்த் வரை வந்த முன்னாள் இந்திய வெளிவிவகார அமைச்சர்களின் வரிசையில் சுக்ளாவும் சேர்ந்து கொள்வாரேதவிர நடக்கப்போவது ஏதுவுமில்லை என்றாகிவிடும்.

---

தெரிவித்துள்ளார்

இந்நிறுவனம் மேற்படி பொருள்களை வடபகுதிக்கு மாதங்களாக முயற்சி செய்து வந்தது குறிப்பிடத்தக்கது.

(க)

# களஞ்சியத்தை பதிவு செய்ய வர்த்தகர் சங்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வர்த்தகர்கள் பொருட்களை களஞ்சியப்படுத்தும் இடங்களின் முகவரிகளை வர்த்தகர் சங்கத்தில் உடன் பதிவு செய்யும்படி கோரப் படுகின்றார்கள். மொத்த வியாபாரிகளும், சில்லறை வியாபாரிகளும் தத்தமது களஞ்சியத்தில் மட்டுமே பொருள்களை களஞ்சியப் படுத்தல் வேண்டும். பதிவு செய்யப்படாத இடங்களில களஞ்சிய படுத்தல் கண்டு பிடிக்கப்பட்டால் கட்டட உரிமையாளர்கள் கடும் தண்டனைக்குள்ளாக்கப்படுவது டன் பொருள்களும் பறிமுதல் செய்யப்படும் என வர்த்தக சங்கமும் விலைக்கட்டுப்பாட்டு திணைக்களமும் கூட்டாக விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளன.

# கவனிப்பாரற்ற நிலையில் கைதடி வயோதிபர் இல்லம்

(செ. த. மை)

கைதடியில் அமைந்துள்ள அரசாங்க வயோதிபர் இல்லம் பல மாதங்களாக எந்த வித வசதியுமின்றி கவனிப்பாரற்ற நிலையில் உள்ளது.

இந்த இல்லத்தில் 129 ஆண்களும் 71 பெண்களும் தங்கியுள்ளார்கள். இவர்களுள் 58 வயோதிபர்கள் மெத்தை வசதியின்றி வெறும் கட்டிலிலும் பலகைகளிலும் இருந்து கஷ்டப்படுவதை காணக் கூடியதாகவுள்ளது.

அத்துடன் இந்த விடுதிக்கென தனியாக ஒரு மருந்தகம் இருந்தும் ஆறு ஆண்டுகளாக மருந்து வகைகள் அரசாங்கத்தினால் அனுப்பி வைக்கப்படவில்லை. டாக்டருக்குரிய விடுதி வசதி இருந்தும் டாக்டர் இல்லாத நிலை காணப்படுகிறது.

தற்போது அருகாமையிலிருக்கும் கைதடி ஆயுள்வேத வைத்தியசாலையில் கடமையாற்றும் டாக்டர் ஒருவர் இரண்டு மணி நேரம் வந்து வயோதிபர்களை பார்வையிடுகின்றனர். ஆனால் அந்த டாக்டர்களுக்கு மேலதிக சேவைக்கான சம்பளம் கடந்த பல மாதங்களாக சமூக சேவைப் பகுதியினால் வழங்கப்படவில்லை

இவை எல்லாவற்றிற்கும் மேலாக வாகன வசதியில்லை. வயோதிபர்களை பார்வையிட போதிய ஆட்கள் இன்மை உடுபுடவையின்மை போன்றவையும் காணப்படுகின்றன

வடக்கு கிழக்கு மாகாணத்துக்கென பொதுவாக அமைந்துள்ள ஒரே ஒரு வயோதிபர் இல்லம் இது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

# சிறுபிள்ளைகளுக்கு ஆஸ்பிரின் அபாயத்தை விளைவிக்கும்

தற்போதுள்ள பனடோல் தட்டுப்பாட்டு காரணத்தால் சிறு பிள்ளைகட்கு ஆஸ்பிரின் யாழ்மாவட்டத்தில் கூடுதலாகப் பாவிக்கப்படுகிறது.

இதனால் சிறு பிள்ளைகள் மிகவும் அபாயகரமான ஒரு நோயால் பிடிக்கப்பட்டு மரணமடையவேண்டிய நிலை ஏற்படுகின்றது.

இந்த நோயின் பெயர் Reye s' Syndrome. எனவே தயவு செய்து இக்காரணத்தை விட்டும் ஆஸ்பிரின் அல்லது ஆஸ்பிரின் கலந்து மருந்து வகைகளையோ 12 வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளுக்கு கொடுக்கவேண்டாம் என்று யாழ் போதனா வைத்திய சாலை வைத்திய வட்டாரம் தெரிவிக்கிறது.

யாழ் மாவட்டத்திலும்; ஏனைய மாவட்டங்களிலும் உள்ள வைத்தியர்களையும், வைத்திய நிறுவனங்களையும் சிறு பிள்ளைகளுக்கு ஆஸ்பிரின் பாவிக்க வேண்டாம் என்று கட்டாயவேண்டு கோள் விடுக்கப்பட்டுள்ளது

காய்ச்சலுக்கு பனடோல் பரசிற்றமோல், ஸ்ரெசிற்றாமோல், கல்போல், ஆகிய வற்றையே பாவிக்கும் படி தெரிவிக்கப்படுகின்றது

(85)

---

விளையாட்டுத்துறை பொறுப்பாளர் கபரின் டீ. ஏ. எம். தனசிங்கம் 9 பேர் கொண்ட ஆட்சிக்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்

மேலும் திருவாளர்கள் வே. யி. செபஸ்தியாம்பிள்ளை (ஜே. பி.) ஏ. சபாபதிப்பிள்ளை (யாழ் உதவி அரசாங்க அதிபர்), தொழில் அதிபர் சின்னராசா, பழமைமிக்செல்வர் கே. சச்சிதானந்தசிவம், தொழிலதிபர் எஸ். ஞானப்பிரகாசம் ஆகியோர் எதிர் வரும் இருவருடங்களுக்கு போஷகர்களாக தெரிவுசெய்யப்பட்டனர்.

## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட சாரணர் இளைச்சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமை 26 ஆம் திகதி யாழ். வைத்தீஸ்வரா வித்தியாசாலையில் நடைபெறும்

யாழ். அரசாங்க அதிபர் அன்ரன் அல்பிரட் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டம் 6 ஆண்டுகளின் பின்னர் நடைபெறுகின்றது என அறிவிக்கப்பட்டுள்ளது சகல பாடசாலை அதிபர்கள், உப அதிபர்கள், சாரணர் தலைவர்கள் மற்றும் இளைச்சங்க உறுப்பினர்களும் தவறாது சமூகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## புதிய நிர்வாகக் குழு தெரிவு

ஓட்டுமடம் கலைவாணி வாசிகசாலை நிலையத்தில் கடந்த 6-1-91 நடைபெற்ற வருடாந்த பொதுக் கூட்டத்தில் புதிய நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக திரு ச. திலகன் தெரிவு செய்யப்பட்டார் இதனைத் தொடர்ந்து உபதலைவர் செயலாளர், உபசெயலாளர், பொருளாளர், காப்பாளர், நூலகப் பொறுப்பாளர் உபகுழுக்களின் பொறுப்பாளர்கள் என இருபதின்மர் செயற்குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

## சலுகைக் கட்டணத்தில் சிகை அலங்காரம்

வட இலங்கை சிகை அலங்கரிப்பாளர் சங்கம் விடுதலைப் புலிகளுக்கு சலுகைக் கட்டணத்தில் தொழில் செய்யும் தீர்மானத்தை எடுத்துள்ளது.

கடந்த 23ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெற்ற சங்க நிர்வாகச் சபைக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது (21)

# பால்டிக்கின் சுதந்திரத்திற்கு வலுவான ஆதரவு அளிக்கப்படும்

## - ஜேம்ஸ் பேகர்

(வாஷிங்டன்)
சோவியத்யூனியனின் பால்டிக் குடியரசுகள் சுதந்திரமாக்கப்பட்ட அரசுகளாக வருவதற்கு வலுவான ஆதரவு அமெரிக்காவால் அளிக்கப்படும் என அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜேம்ஸ் பேகர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வாஷிங்டனில் லித்வேனிய, லட்விய மற்றும் எஸ்தோனிய பால்டிக் குடியரசுகளின் தலைவர்கள் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜேம்ஸ் பேகரை சந்தித்தபோதே இவ்வாறு கூறப்பட்டது.

பால்டிக்குடியரசுகள் சுதந்திரமான ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டால் அவர்கள் சுதந்திரமாக இருப்பதற்கு ஆதரவினை வழங்க அமெரிக்கா முன்வரும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை லித்வேனியா மீது சோவியத் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளுக்கும் ஜேம்ஸ் பேகர் கவலை தெரிவித்தார். இது பற்றித் ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் சோவியத் ஜனாதிபதி கொர்ப்பசேவுடன் பேசியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# தொலைக்காட்சியில் கைதிகள்; ஜோர்ஜ்புஷ் முகம் சுழிப்பு

(வாஷிங்டன்)
அமெரிக்க யுத்தக் கைதிகளை ஈராக் தொலைக்காட்சியில் காட்டும் போதெல்லாம் ஜனாதிபதி புஷ் முகத்தைச் சுழித்துக் கொள்கிறாராம். அமெரிக்கக் கப்பற்படை முன்னாள் விமானியாகிய புஷ் வான் வெளியில் வைத்துச் சுட்டு வீழ்த்தப்படும் விமானி படும் அவஸ்தையைப் போர் வீரன் என்ற வகையில் நன்குணர்ந்தவர்.

2-ஆம் உலக யுத்தத்தின் போது புஷ் ஓட்டிச் சென்ற விமானம் ஒன்று 1944 செப்டம்பர் 2 ஆம் திகதியன்று எதிரிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது புஷ் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார்; பசுபிக் சமுத்திரத்தில் வீழ்ந்த புஷ்ஷை அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல் ஜப்பானியருடன் கடலில் போராடிக் காப்பாற்றியது. இன்னொரு சமயம் பசுபிக் சமுத்திரத்தின் மேல் புஷ் பறந்து செல்லும்போது இயந்திரக் கோளாறு காரணமாக விமானம் கடலில் வீழ்ந்தது. 30 நிமிடங்கள் கடலில் மிதந்த புஷ்ஷை அமெரிக்க நாசகாரிக் கப்பல்கள் மீட்டெடுத்தன.

'உலகத்துக்காக வாழ்க்கை' என்ற சுயசரிதையில் புஷ் இந்தச் சம்பவங்களைப் பற்றிக் கூறும்போது, தனது யுத்த வாழ்க்கையில் பயங்கரமான நிகழ்வுகள் என்கிறார்.

புஷ் அமெரிக்க விமானப் படையில் விமானியாவதற்காகப் 18 வயதில் பள்ளிக்கூடத்தை விட்டு வெளியேறினார் என்பது குறிப்பிடத்தக்கது

# திங்கட்கிழமை முதல் நாலாம் கட்ட நிவாரணம்

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்டத்தில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் விசேட இலவச உலர் உணவு விநியோகத்தின் நாலாம் கட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிலும் ஆரம்பிக்கப்பட இருக்கின்றது

இந்த உணவுப் பொருள் விநியோகத்தின் போது முன்னர் வழங்கப்பட்ட விநியோக அளவில் அரிசி பாவனையாளர்களுக்கு வழங்கப்படும்.

நேற்று யாழ் செயலகத்தில் இடம்பெற்ற உலர் உணவு விநியோகம் பற்றிய ஆலோசனைக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. (ச)

---

சித்திரவதையின்

பளையில் விநாயகபுரம் என்னும் இடத்தில் கைது செய்யப்பட்ட குணா என்பவரும் சித்திரவதையின் பின்னர் அதிரடிப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். இவரைக் கைதுசெய்ததும் திருக்கோவில் அதிரடிப்படை முகாமைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

---

மீள் நியமனத்திற்கு

தும் தேவையா என்று அந்தந்தத் திணைக்களங்களின் தலைவர்களும், அமைச்சுக்களும் ஆலோசித்து தீர்மானித்த பின்னரே குறுகிய கால ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்பட இருக்கின்றது.

மீள் நியமனம் வழங்கப்படும் அரச ஊழியர்களது ஓய்வூதிய விண்ணப்பமும் ஏற்றுக் கொள்ளப்பட்டு ஓய்வூதியக் கொடுப்பனவுகளும் வழங்கப்படுவதுடன் மீள் நியமனம் பெற்ற தொழிலுக்காகவும் சம்பளம் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் தற்போது ஓய்வூதியத்திற்கு விண்ணப்பிக்கும் அரச ஊழியர்கள் மீள் நியமனத்துக்கும் கூடவே

---

உணவுமுத்திரை

பல மாணவர்கள் மேற்படி முத்திரை அட்டைகளைக் கையில் கொண்டு அலைவதாகவும் இம் முத்திரை அட்டைகளுக்கான பொருள்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வந்து சேரவில்லை என்று கூட்டுறவுச் சங்கங்களின் முகாமையாளர்களினால் தெரிவிக்கப்படுகின்றதென்றும் கூறப்பட்டது. (தி)

---

மாதகல்

முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டனர்

இவர்கள்பற்றிய தகவல்களைப் பெற்றுத்தருமாறு பெற்றோர் செஞ்சிலுவைச் சங்கத்தினரை நாடியுள்ளனர்.

கடற்படையினரால் கட்டிக் கொல்லப்பட்டவர்களில் கதிரவேல் விநாயகமூர்த்தி (பண்டத்தரிப்பு) மூத்ததம்பி குமார் (பிரான்பற்று), டிஸ்கோ மோகன் (மாதகல்). அந்தோனி (மாதகல்) ஆகியோர்

---

போர்நிறுத்த

கள் லண்டனில் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை அரசு ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைக்கு முன்வராததாலேயே இந் நிலை ஏற்பட்டதாக அவ் அறிக்கை மேலும் கூறியுள்ளது

---

புலிகளைக்

அரசு தெரிவித்த எந்தத் தகவலையும் தாம் சென்னையிலுள்ள விடுதலைப் புலிகளுக்கோ அல்லது யாழ்ப்பாணத் திலுள்ள தலைமைக்கோ அறிவிக்கவில்லை என்றும் குறிப்பிட்டார்.

எல்லா இலங்கைத் தமிழ [illegible]

# கொழும்பு பயணிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அனுமதி

(வவுனியா)
வடபகுதி பிரயாணிகள் தென்பகுதி செல்வதற்கு வவுனியா யாழ். வீதி இராணுவ தடைமுகாமில் உள்ள இராணுவத்தினரால் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே அனுமதி வழங்கப்படுகிறது.

இராணுவத்தின் கட்டுப்பாட்டை மீறி முண்டியடித்துச் செல்ல முயற்சிப்பவர்கள் இராணுவத்தினரால் கொடுமையான முறையில் தாக்கப்படுகின்றனர். பல பிரயாணிகள் இராணுவத்தின் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு உட்பட நேரிடுகிறது.

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவரான ச. முகுந்தன் (25) என்பவர் மேற்படி இராணுவத்தின் துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்து யாழ்ப்பாணம் கொண்டு வரப்பட்டுள்ளார்.

கடந்த 23 ஆம் திகதி இடம்பெற்ற இச் சம்பவத்தின் பின்னர் பல பிரயாணிகள் இராணுவத்தால் தாக்கப்பட்டனர்.

பல பிரயாணிகள் கை, கால்கள் வீக்கமடைந்த நிலையில் தாண்டிக்குளம் சந்தியில் ஓய்வெடுப்பதை அவதானிக்க முடிகிறது. (தி)

# வவுனியாவில் அகதிமுகாம் வேறுகட்டடத்திற்கு மாற்றம்

(வவுனியா)
வவுனியா தமிழ் மகாவித்தியாலயத்தில் தங்கியிருந்த அகதிகள் நகரசபைக் கட்டடத்திற்கு மாற்றப்பட்டு அக்கட்டடம் அரசின் அங்கீகரிப்பைப் பெற்ற அகதி முகாமாக அமைக்கப்பட்டுள்ளது.

தற்போது அகதிமுகாம் அமைக்கப்பட்டுள்ள வவுனியா நகரசபைக் கட்டடப் பகுதியிலேயே வடபகுதி பிரயாணிகள் அனுமதி பெற்று தென் பகுதிக்குச் செல்ல வேண்டும் என்று கட்டளையிடப்பட்டுள்ளது. (தி)

## குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தில்

# சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மட்டுமே பரீட்சை

(கொழும்பு)
கடந்த வருடம் செப்டெம்பர் ஒன்பதாம் திகதியன்று நடந்த குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான எழுத்துப் பரீட்சைகள் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மட்டுமே நடைபெற்றன.

தமிழ்மொழிமூலம் பரீட்சைகள் நடைபெறும் என அறிவித்து, தமிழ்ப் பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டையும் பரீட்சைத் திணைக்களத்தால் வழங்கப்பட்டிருந்த போதும் தமிழ்மொழி மூலம் பரீட்சைகள் நடத்தப்படவில்லை.

இந்தப் பரீட்சைகள் நடத்தப்படாமைக்குரிய காரணங்களும் இதுவரை பரீட்சைத் திணைக்களத்தால் அறிவிக்கப்படவில்லை.

தமிழ்ப் பரீட்சார்த்திகள் கலந்து கொள்ளாமல் பரீட்சைகள் நடத்துவதோ, நியமனங்கள் செய்வதோ தகுதி மற்றும் திறமையின் அடிப்படையில் இனப்பாகுபாடற்ற நியமனங்கள் நடைபெறும் என்ற அரசாங்கத்தின் அறிவித்தல் இங்கு நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதையே காட்டுகிறது என பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார இது பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

---

## கம்பன் கழக 10 ஆண்டு நிறைவு நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)
அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் பத்தாண்டு நிறைவு நிகழ்ச்சித் தொடர் ஒன்றில் ஸ்ரீ தியாகப் பிரம்ம இசை ஆராதனை நல்லூர் கம்பன் கோட்டத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

காலை நிகழ்ச்சிகள் 9.00 மணி தொடக்கம் 12.00 மணி வரையிலும் மாலை நிகழ்ச்சிகள் 2.00 மணி தொடக்கம் 6.00 மணி வரையும் நடைபெறும்.

# மூதூர் கல்விக் கோட்டம்

பட்டு வரும் விசேட இலவச உலர் உணவு விநியோகத்தின் நாலாம் கட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை சாலபலநோக்

சித்திரவதையின்

பளவில் விநாயகபுரம் என்னும் இடத்தில் கைது செய்யப்பட்ட குணா என்பவரும் சித்திரவதையின் பின்னர் அதிரடிப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். இவரைக் கைதுசெய்ததும் திருக்கோவில் அதிரடிப்படை முகாமைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மீள் நியமனத்திற்கு

தும் தேவையா என்று அந்தந்தத் திணைக்களங்களின் தலைவர்களும், அமைச்சுக்களும் ஆலோசித்து தீர்மானித்த பின்னரே குறுகிய கால ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்பட இருக்கின்றது.

மீள் நியமனம் வழங்கப்படும் அரச ஊழியர்களது ஓய்வூதிய விண்ணப்பமும் ஏற்றுக் கொள்ளப்பட்டு ஓய்வூதியக் கொடுப்பனவுகளும் வழங்கப்படுவதுடன் மீள் நியமனம் பெற்ற தொழிலுக்காகவும் சம்பளம் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் தற்போது ஓய்வூதியத்திற்கு விண்ணப்பிக்கும் அரச ஊழியர்கள் மீள் நியமனத்துக்கும் கூடவே விண்ணப்பித்து வருகின்றனர். மேற்படி மீள் நியமனம் தொடர்பான பொதுநிர்வாக அமைச்சின் சுற்று நிருபம் கொழும்பில் வெளியாகி போதிலும் யாழ். மாவட்டத்திற்கு இதுவரை வந்து சேரவில்லை. (க)

கடந்த ஜூலைக்குப்

கள் தேவை எனப் பதிவு செய்துள்ளனர். பதிவு செய்தவர்களில் 68 பேர்கள் செயற்கைக் கால்களைப் போட்டிருக்கிறார்கள். செயற்கைக் கை தேவை எனப் 14 பேர்கள் பதிவு செய்துள்ளனர். இவர்களில் ஏழு பேர்களுக்கு செயற்கைக் கை பொருத்தப்பட்டுள்ளது.

இந் நிலையம் ஆரம்பகாலம் தொடக்கம் பல சிறந்த பணிகளைச் செய்து இன்றுவரை 438 பேர்களுக்கு செயற்கைக் கால் வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. முழங்காலுக்கு மேல் 103 பேர்களுக்கும், முழங்காலுக்குக் கீழ் 262 பேர்களுக்கும் இரு கால்களும் இல்லாதவர்கள் 9 பேர்களுக்கும், மேலதிகமாக 64 பேர்களுக்கும் இன்றுவரை பொருத்தப்பட்டுள்ளதாக இந் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (24)

யே ... இன் போது முன்னர் வழங்கப்பட்ட விநியோக அளவில் அரிசி பாவனையாளர்களுக்கு வழங்கப்படும்.

நேற்று யாழ் செயலகத்தில் இடம்பெற்ற உலர் உணவு விநியோகம் பற்றிய ஆலோசனைக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. (க)

உணவுமுத்திரை

பல மாணவர்கள் மேற்படி முத்திரை அட்டைகளைக் கையில் கொண்டு அலைவதாகவும் இம் முத்திரை அட்டைகளுக்கான பொருள்கள் கூட்டுறவுச் சங்கக்கிளைகளுக்கு வந்து சேரவில்லை என்று கூட்டுறவுச் சங்கக் கிளைகளின் முகாமையாளர்களினால் தெரிவிக்கப்படுகின்றதென்றும் கூறப்பட்டது. (தி)

மாதகல்

முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டனர்

இவர்கள்பற்றிய தகவல்களைப் பெற்றுக்தருமாறு பெற்றோர் செஞ்சிலுவைச் சங்கத்தினரை நாடியுள்ளனர்.

கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டவர்களில் கதிரவேல் விநாயகமூர்த்தி (பண்டத்தரிப்பு) மூத்ததம்பி குமார் (பிரான்பற்று). டிஸ்கோ மோகன் (மாதகல்). அந்தோனி (மாதகல்) ஆகியோர் அடங்குவர் எனத் தெரியவருகின்றது. (ச)

பண்டத்தரிப்பில்

ஆகியவற்றை கண்டுபிடித்தனர்.

உரிமையாளர் அங்கு இல்லாததால் அவை சீல்வைக்கப்பட்டுள்ளதாகவும் விரைவில் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படும் எனவும் நசீர் தெரிவித்தார்.

மேலும் இப்பகுதியில் ஒரு வீட்டில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 2 பரல் மண்ணெண்ணெய் விடுதலைப்புலிகளால் பறிமுதல் செய்யப்பட்டு நேற்று முன்தினம் 1 லீற்றர் 30ரூபாய் வீதம் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்பட்டது. விற்பனையில் இடைத்த பணம் முழுவதும் மண்ணெண்ணெய் உரிமையாளரிடம் வழங்கப்பட்டது. (ச)

முத்தையன்

கள் தக்குதலை மேற்கொண்டதில் முத்தையன்கட்டு இரண்டாம் கண்டத்தைச் சேர்ந்த புஸ்பவதி (வயது 32) என்பவர் படுகாயமடைந்தார் அப்பகுதியில் உள்ள 33 வீடுகளும், கடையொன்றும் சேதமடைந்தன (மு)

புஷ் பறந்து செல்லும்போது இயந்திரக் கோளாறு காரணமாக விமானம் கடலில் வீழ்ந்தது. 30 நிமிடங்கள் கடலில் மிதந்த புஷ்ஷை அமெரிக்க நாசகாரிக் கப்பல்கள் மீட்டெடுத்தன.

'உலகத்துக்காக வாழ்க்கை' என்ற சுயசரிதையில் புஷ் இந்தச் சம்பவங்களைப் பற்றிக் கூறும்போது, தனது யுத்த வாழ்க்கையில் பயங்கரமான நிகழ்வுகள் என்கிறார்.

புஷ் அமெரிக்க விமானப் படையில் விமானியானதற்காகப் 18 வயதில் பள்ளிக் கூடத்தை விட்டு வெளியேறினார் என்பது குறிப்பிடத்தக்கது

போர்நிறுத்த

கள் லண்டனின் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை அரசு ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைக்கு முன்வராததாலேயே இந் நிலை ஏற்பட்டதாக அவ் அறிக்கை மேலும் கூறியுள்ளது

புலிகளைக்

அரசு தெரிவித்த எந்தத் தலைவலையும் தாம் சென்னையிலுள்ள விடுதலைப் புலிகளுக்கோ அல்லது யாழ்ப்பாணத் தலைமைக்கோ அறிவிக்கவில்லை என்றும் குறிப்பிட்டார்.

எல்லா இலங்கைத் தமிழரையும் விடுதலைப்புலிகளாக தமிழக மக்கள் கருதக்கூடாது என்றும் விடுதலைப் புலிகள் மீது நடவடிக்கை எடுக்கும்படி மத்திய அரசு தம்மை நிர்ப்பந்திப்பதாக தாம் எங்கும் குறிப்பிடவில்லை என்றும் கூறியுள்ளார். (ரூ)

மேற்குத்

களுக்கு முன்னால் பந்தோபஸ்து பலப்படுத்தப்பட்டுள்ளது. இதேவேளை, கடந்த வெள்ளி முதல் கொழும்பிலும், சுற்றுவட்டாரங்களிலும் அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களுக்கும், ஊர்வலங்களுக்கும் பாதுகாப்பு அமைச்சு தடை உத்தரவு பிறப்பித்துள்ளது. பின்னர், கண்டனக் கூட்டங்களை மாத்திரம் அனுமதிக்கலாம் என பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் ஜனாதிபதி புஷ்சின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான வெள்ளை மாளிகை முன் ஆர்ப்பாட்டங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும் கொழும்பில் இந்தத் தடையை அரசாங்கம் ஏன் விதிக்க வேண்டும் என்றும் ஐக்கிய சோஷலிச முன்னணியைச் சேர்ந்த அத்தவுட செனிவரட்ண பாராளுமன்றத்தில் அமைச்சரைக் கேட்டார்.

# சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மட்டுமே பரீட்சை

(கொழும்பு)

கடந்த வருடம் செப்டெம்பர் ஒன்பதாம் திகதியன்று நடந்த குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான எழுத்துப் பரீட்சைகள் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மட்டுமே நடைபெற்றன.

தமிழ்மொழிமூலம் பரீட்சைகள் நடைபெறும் என அறிவித்து, தமிழ்ப் பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டையும் பரீட்சைத் திணைக்களத்தால் வழங்கப்பட்டிருந்த போதும் தமிழ்மொழி மூலம் பரீட்சைகள் நடத்தப்படவில்லை.

இந்தப் பரீட்சைகள் நடத்தப்படாமைக்குரிய காரணங்களும் இதுவரை பரீட்சைத் திணைக்களத்தால் அறிவிக்கப்படவில்லை.

தமிழ்ப் பரீட்சார்த்திகள் கலந்து கொள்ளாமல் பரீட்சைகள் நடத்தவதோ, நியமனங்கள் செய்வதோ தகுதி மற்றும் திறமையின் அடிப்படையில் இனப்பாகுபாடற்ற நியமனங்கள் நடைபெறும் என்ற அரசாங்கத்தின் அறிவித்தல் இங்கு நடைமுறைப் படுத்தப்படவில்லை என்பதையே காட்டுகிறது என பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார இது பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## கம்பன் கழக 10 ஆண்டு நிறைவு நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் பத்தாண்டுநிறைவு நிகழ்ச்சித் தொடர் ஒன்றில் ஸ்ரீ தியாகப் பிரம்ம இசை ஆராதனை நல்லூர் கம்பன் கோட்டத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

காலை நிகழ்ச்சிகள் 9.00 மணி தொடக்கம் 12.00 மணி வரையிலும் மாலை நிகழ்ச்சிகள் 2.00 மணி தொடக்கம் 6.00 மணி வரையும் நடைபெறும்.

# மூதூர் கல்விக் கோட்டம் இன ரீதியாகப் பிரிப்பு

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் கல்வித்திணைக்களத்தின் மூதூர் கல்விக்கோட்டம் இனரீதியாக பிரிக்கப்பட்டுள்ளதுடன் தமிழரான கோட்டக்கல்வி அதிகாரி ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தஅலுவலகம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு முஸ்லிம் பாடசாலைகளுக்கான கோட்டக்கல்வி அலுவலகமொன்றினை கிண்ணியாவிலும் தமிழ்ப் பாடசாலைகளுக்கான கோட்டக்கல்வி அலுவலகத்தை மூதூரிலும் மேற்படி கல்வித்திணைக்களம் அமைத்துள்ளது.

மேற்படி மூதூர் கோட்டக் கல்வி அதிகாரியாக கடமையாற்றிய தமிழரான திரு. தம்பிராசா என்பவர் சிறீலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார். கோட்டக்கல்வி அதிகாரி பதவிக்கு முயற்சிசெய்து பலன் இடைக்காத முஸ்லிம் அதிகாரி ஒருவரே மேற்படி கல்வி அதிகாரி கைது செய்யப்பட்டதற்கு சூத்திரதாரியாக செயற்பட்டுள்ளார் எனத் தெரியவருகின்றது. (25)

மீசாலை

ளார் கொழும்பு ஏஜென்சி இவருடன் சேர்ந்து அனுப்பியவர்களே இவரைக் கொலை செய்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது. இவர் ஐந்து மாதத்திற்கு முன்பே திருமணம் செய்திருந்தார், இவரிடம் பெறுமதியான காசோலைகள் இருந்ததாகவும் தெரியவருகிறது. (மு)

## எரிந்த கடையில் ஆணின் சடலம்

(முல்லைத்தீவு)

முத்தையன் கட்டுப் பகுதியில் 1 ஆம் கண்டம் என்னும் இடத்தில் தீ ல் எரிந்து ஒருவர் மரணமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் இப் பகுதியில் இருந்த கடையொன்று இனந்தெரியாத நபர்களால் தீயிட்டுக் கொழுத்தப்பட்டது. பின்னர் இந்த எரிந்த கடையினுள் ஒருவரின் சடலம் கருகிய நிலையிற்கண்டு பிடிக்கப் பட்டது.

இச் சடலம் இரத்தினசிங்கம் (வயது 45) என்பவருடையதுஎனபின்னர் இனம் காணப்பட்டது. (க)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது